ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
Total No. of Questions : 26 ] [ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 442-T (RS)**
**Code No. : 442-T (RS)**

**ಡಿ.ಎಲ್.ಎಡ್. ದ್ವಿತೀಯ ವರ್ಷ**
**D.El.Ed. SECOND YEAR**
ಶಿಕ್ಷಣ
**EDUCATION**
# ರೂಢಿಯಾಗಿ ಶಿಕ್ಷಣ
# EDUCATION AS PRACTICE
( ತಮಿಳು ಭಾಷಾಂತರ )
( Tamil Version )
**(ಪರಿಷ್ಕೃತ ಪಠ್ಯವಸ್ತು)**
**(Revised Syllabus)**

ದಿನಾಂಕ : 13. 10. 2020 ]
Date : 13. 10. 2020 ]
ಸಮಯ: ಬೆಳಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1.00 ರವರೆಗೆ ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60
Time : 10.00 A.M. to 1.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பாகம் – I

**இப்பகுதியில் ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படுகிறது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.** 10 × 1 = 10

1. மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற தேர்வுகளை செய்கிறான் என்று நம்பிய ஊவியலாளர்

   (A) பி.எஃப். ஸ்கின்னர்

   (B) வில்லியம் க்ளேசர்

   (C) ஜீன் பியாஜி

   (D) ப்ரூனர்

2. குழந்தையைக் கல்வி முறையில் மிக முக்கியமானது

   I. அனுபவக் கற்றல்

   II. அறிவு கட்டமைப்பு

   III. பாடப்புத்தகக் கற்றல்

   IV. இணக்கமான பாடத்திட்டம்

   *இவற்றுள் :*

   (A) I மற்றும் III (B) II மற்றும் III

   (C) I, II மற்றும் IV (D) III மற்றும் IV

3. வைகாட்சிகி கொள்கையின்படி அறிவாற்றல் வளர்ச்சிக்கு துணைபுரியும் காரணி

   (A) உயிரியல் அடிப்படை வளர்ச்சி அல்லது முதிர்வு

   (B) சமுதாயத் தொடர்பு

   (C) கலாச்சாரம்

   (D) மொழி

4. ஒரு கல்வி ஆண்டின் செயல்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஆவணம் அல்லது பதிவு

   (A) பள்ளி நேர அட்டவணை (B) பள்ளி நாட்காட்டி

   (C) வகுப்பு நேர அட்டவணை (D) பள்ளி அலுவலகப் பதிவுகள்

5. வரைகலை ஆதாரமான மதிப்பீட்டுக் கருவிக்கு எடுத்துக்காட்டு

   (A) தரவுத்தளம் (B) மாதிரிகள்

   (C) நாட்குறிப்புகள் (D) காணொலி க்ளிப்புகள்

6. பாடத்திட்டம் மாணவர்களில் பராமரிக்கப்பட வேண்டிய திறன்கள்

   I. வினா எழுப்புதல்

   II. மனப்பாடம் செய்தல்

   III. கருத்துக்களை வெளிப்படுத்துதல்

   IV. பள்ளி அறிவுடன் தமது அனுபவங்களை ஒப்பிட்டுக் கொள்ளுதல்

   *இவற்றுள் :*

   (A) I மற்றும் II (B) II, III மற்றும் IV

   (C) I, III மற்றும் IV (D) II மற்றும் IV

7. கல்வி சமகாலப் பட்டியலில் கல்வி உள்ளதெனில் இதன் பொறுப்பு

   (A) மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களைச் சார்ந்தது

   (B) மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது

   (C) மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது

   (D) உள்ளூர் மற்றும் மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது

8. தனது பண்புகள், உணர்வுகள் மற்றும் நடத்தையைக் கொண்டு தனது இருப்பைத் தெரிந்துகொள்ளும் திறன்

   (A) பச்சாதாபம் (B) படைப்பாற்றல் சிந்தனை

   (C) விமர்சன சிந்தனை (D) சுய விழிப்புணர்வு

9. கற்றல் வளங்களைத் தேர்ந்தெடுக்கையில், சமூகப் பிரச்சனையை உள்ளடக்கிய காரணி

   (A) தெளிவின்மை (B) உயிருள்ள பொருட்கள்

   (C) கலாச்சாரப் பன்முகம் (D) சூழ்நிலை

10. இரக்கம் என்றால்
    - (A) தனது சொந்த உணர்வை அடையாளம் காணும் திறன்
    - (B) பிறருடைய உணர்வுகளுக்காக உணர்ச்சி வசப்படும் திறன்
    - (C) உணர்வுபூர்வமான சூழல்களில் பிறருக்காக உணர்ச்சி வசப்படும் திறன்
    - (D) தனது சொந்த உணர்வுகளின் மூலங்களை அறிந்துகொள்ளும் திறன்

## பாகம் – II

**இப்பகுதியில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொரு விடையும் அரைப்பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் :** 5 × 2 = 10

11. தனிநபர்களுக்கிடையேயான உறவுத் திறனை குழந்தைகளிடம் ஏன் வளர்க்க வேண்டும்?
12. வகுப்பறை பரிவர்த்தனைக்கு வழிகாட்டும் நிலை இருப்புத்தாளில் வழங்கப்பட்ட நான்கு தகுந்த கொள்கைகளைப் பட்டியலிடுக.
13. கூட்டுறவு கற்றலிற்குத் தகுந்த இரண்டு எடுத்துக் காட்டுகளைத் தருக.
14. பிரதிபலிப்புக் கற்பித்தலின் இரண்டு அடிப்படைக் கருத்துக்களைத் தருக.
15. பாரம்பரிய வகுப்பறை மற்றும் உட்பட்ட கற்பவர் நட்பு வகுப்பறைகளுக் கிடையேயான வேற்றுமைகள் இரண்டினை எழுதுக.
16. ஒரு பள்ளி ஜனநாயகப் பள்ளி என்று எக்காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது?
17. ஒரு ஆசிரியராக ஒரு பள்ளியை மிகப்பெரிய அமைப்பின் ஒரு பகுதியாக எவ்வாறு வடிவமைப்பீர்கள்?
18. விமர்சன சிந்தனையாளர்களின் நான்கு பண்புகளைப் பட்டியலிடுக.

## பாகம் – III

**இப்பகுதி வினாக்கள் ஒவ்வொன்றிலும் (a) மற்றும் (b) தேர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும். விடைகள் ஒரு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் :** 8 × 5 = 40

19. a) ''சமுதாய ஊடாட்டம் மற்றும் மொழி அறிவாற்றல் வளர்ச்சியை வடிவமைக்கின்றன.'' இக்கூற்றை விளக்குக.

    *அல்லது*

    b) ''பல்துறை செயல் திறமைசாலி ஆசிரியர்'' என்று ஒரு ஆசிரியரை அழைக்க வேண்டுமெனில் அவரிடமிருக்க வேண்டிய முக்கியப் பண்புகளைத் தெளிவுபடுத்துக.

20. a) பள்ளி ஒரு அமைப்பாகச் செயல்படுவதற்கு வேண்டிய கூறுகளை எழுதி, அவற்றுள் ஒன்று பற்றி விவரிக்க.

    *அல்லது*

    b) ஒரு பள்ளி நிர்வாக அமைப்பின் முக்கிய செயல்முறைகளை எழுதி அவற்றுள் ஏதேனும் ஒன்றினை விளக்குக.

21. a) பொருள்சார் கற்றல் வளங்களின் வகைப்பாடுகளைத் தகுந்த உதாரணங்களுடன் தருக.

    *அல்லது*

    b) கலை மற்றும் அழகியல் உணர்வுகளை வளர்க்கத் துணை புரியும் காரணிகளைக் குறிப்பிடுக.

22. a) ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு செயல்முறை அடிப்படைக் கற்றல் கல்வி முறையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை ஒரு கருத்து மூலமாக விவரிக்க.

**அல்லது**

b) விமர்சன (மாறுநிலை) கற்பிக்கும் கலையை உள்ளடக்கிய ஐந்து காரணிகளைப் பயன்படுத்தி விமர்சன சிந்தனையை எவ்வாறு வளர்ப்பீர்கள்?

23. a) இன்டர்ன்ஷிப் காலத்தில் நீங்கள் தயாரித்த ஏதேனும் ஒரு பாடத்திட்டத்திலிருந்து ஒரு கற்பித்தல் நிகழ்வை ஆய்வு செய்து அதனை வடிவமையுங்கள்.

**அல்லது**

b) ஏழாம் வகுப்பின் ஏதேனும் ஒரு தலைப்பை நீங்களே ஆய்ந்தெடுத்து அதற்கு ஈடுபாடு மற்றும் ஆராய்தல் படிநிலைகளின் மாதிரியை வடிவமைக்கவும்.

24. a) கற்றல் வளங்களின் மாறுநிலை மதிப்பீட்டைச் செய்கையில் கவனத்தில் கொள்ளவேண்டிய ஐந்து கருத்துகளைப் பட்டியலிடுக.

**அல்லது**

b) கிடைக்கூடிய வளங்களின் மிகச்சிறந்த பயன்பாட்டை உறுதிப்படுத்த நீங்கள் பயன்படுத்தும் ஐந்து வரையளவுகளைக் குறிப்பிடுக.

25. a) ''படைப்பாற்றல் சிந்தனை எப்பொழுதுமே பன்முகச் சிந்தனையாக இருக்கும்.'' இக்கூற்றை பகுப்பாய்க.

**அல்லது**

b) ''வாழ்க்கை என்பது சிக்கல் மற்றும் சவால்களை உள்ளடக்கியது'' - இக்கூற்றை பகுப்பாய் செய்க.

26. a) ''கட்டமைப்பு மற்றும் செய்முறைகளை வடிவமைத்தலின் மூலம் பள்ளி தனது நோக்கங்களை சாதித்துக் காட்டுகிறது.'' - இக்கூற்றைத் தெளிவாகத் தருக.

**அல்லது**

b) ''பள்ளி தனது தொலைநோக்கைச் சாதித்துக் காட்டுவதற்கு வளங்கள் தேவை'' - இக்கூற்றை பகுப்பாய்வு செய்க.